இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 14 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 07 – வெள்ளிக்கிழமை 23 ஆகஸ்டு 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 14 : Thiruvalluvar Year - 2055 - Aavani 07 - Friday 23 August 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## உரிமைத் தொகை ஏதுமின்றி கடிதங்கள், கதைகள், கவிதைகள், நாடகங்கள் திரைப்பட வசனங்கள் என

# கலைஞர் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (22.8.2024) தலைமைச் செயலகத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில், டாபர் இந்தியா லிமிடெட் நிறுவனம், திண்டிவனம், சிப்காட் உணவுப் பூங்காவில் 400 கோடி ரூபாய் முதலீட்டில் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் உலகத் தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு அரசிற்கும் டாபர் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, சிப்காட் நிறுவனத்தின் மேலாண்மைய இயக்குநர் மருத்துவர் கே.செந்தில்ராஜ், டாபர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் மோஹித் மல்ஹோத்ரா, செயல்பாட்டுத் தலைவர் ராகுல் அவஸ்தி, உற்பத்தித் தலைவர் ஹ்ரிகேஷ் ரமணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை, ஆக. 23 -

**"முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தும் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி நாட்டுடைமையாக்கப்படுகிறது என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இது வரை 179 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 14.42 கோடி நூலுரிமைத் தொகை அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வரிசையில், சமூக நீதிக்காக அரும்பாடுபட்ட தலைவரும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடியவரும், தமிழுக்கு செம்மொழி தகுதியினைப் பெற்றுத் தந்தவரும், தனது எழுத்து மற்றும் பேச்சுக்களின் மூலம் உலகெங்கும் வாழும் தமிழர் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்தவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அனைத்து நூல்களும் தமிழ்நாடு அரசு சார்பில் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி நாட்டுடைமையாக்கி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று (22.8.2024) ஆணை வழங்கியுள்ளார்.

### பல தலைமுறைகளின் எழுச்சிக்கான திறவுகோள்!

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சூன் 3, 1924 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை கிராமத்தில் பிறந்து, தமது கடின உழைப்பாலும் அளப்பரிய திறமையாலும் தமிழ் வளத்தாலும், தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் ஆளுமையாக விளங்கியவர். முத்தமிழறிஞர் கலைஞர் என்பது பெயர் மட்டுமல்ல; தமிழினத்தின் தன்னேரில்லாத தனி முகவரி! பல தலைமுறைகளின் எழுச்சிக்கான திறவுகோல் ! 5 முறை முதலமைச்சர், 13 முறை சட்டமன்ற உறுப்பினர் என ஒரு தலைமுறை மாற்றத்திற்கு வித்திட்ட மகத்தான தலைவர்.

தமிழுணர்வு கொண்ட 14 வயது சிறுவனாகத் தம் இலக்கிய வாழ்வைத் தொடங்கி, 15ஆம் வயதில் "மாணவ நேசன்" என்ற கையெழுத்து ஏடு தொடங்கி, 18ஆம் வயதில் பேரறிஞர் அண்ணா அவர்களின், "திராவிட நாடு" இதழில் இளமைப்பலி என்ற அவரது முதற்கட்டுரை வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றது. தம்முடைய 20ஆவது வயதில், திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் என்னும் இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பை உருவாக்கினார்.



### 'முரசொலி' நாளிதழ் இன்றும் முழங்குகிறது!

தமது 23ஆம் வயதில் இராஜகுமாரி திரைப்படத்திற்கு முதன் முதலாக வசனம் எழுதினார். முதன் முதலில் "முரசொலி" என்னும் துண்டு இதழ் வெளியீட்டை 1942ஆம் ஆண்டு வெளியிட்டு; பின்னர் 1946 முதல் 1948 வரை திங்களிதழாக மாற்றி; பின் மீண்டும் 1953இல் சென்னையில் திங்களிதழாகத் தொடங்கி 1960ஆம் ஆண்டில் அதனை முழுமையான நாளிதழாக மாற்றினார். அந்த முரசொலி நாளிதழ் இன்றும் முழங்குகிறது.

அனார்கலி, உதய சூரியன், உன்னைத்தான் தம்பி, இளைஞன் குரல், ஒரே முத்தம், காகிதப்பூ, சாக்ரடீஸ், சாம்ராட் அசோகன், சிலப்பதிகாரம் - நாடகக் காப்பியம், சேரன் செங்குட்டுவன், திருவாளர் தேசியம் பிள்ளை, தூக்குமேடை, நச்சுக் கோப்பை, நான்மணிமாலை, நானே

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னின்று நடத்திய – 2023 – கேலோ இந்தியா

# இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் குறித்த காலப்பேழை புத்தகம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஆக. 23 –

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2024) தலைமைச் செயலகத்தில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி 2023 குறித்து விளக்கும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட "Future is Here – Khelo India Youth Games 2023 என்ற காலப்பேழை புத்தகத்தை (Coffee Table Book) வெளியிட்டார்.

முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 2023ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 19.01.2024 முதல் 31.01.2024 வரை சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் சிறப்பாக நடத்தப்பட்டது.

இப்போட்டிகளில், 31 மாநிலங்களிலிருந்து (யூனியன் பிரதேசம் உட்பட) 2875 ஆண்கள் மற்றும் 2755 பெண்கள், என மொத்தம் 5,630 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து 570 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் 26 போட்டிகளில் கலந்துகொண்டு 38 தங்கப் பதக்கம், 21 வெள்ளிப் பதக்கம், 39 வெண்கலப் பதக்கம், என மொத்தம் 98 பதக்கங்களை பெற்று தேசிய அளவில் இரண்டாமிடத்தை தமிழ்நாடு அணி பெற்றுள்ளது.

1,020 விளையாட்டு தொழில் நுட்ப வல்லு நர்கள், 1,331 அணி மேலாளர்கள், 480 விளை யாட்டு தன்னார்வலர்கள் மற்றும் 1,450 தன்னார்வலர்கள் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடத்துவதற்கு உறுதுணையாக இருந்தனர்.

அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகள், உயர் அலுவலர்கள் மற்றும் விளையாட்டு தொழில் நுட்ப வல்லுநர்கள் நட்சத்திர ஓட்டல்களில் தங்கவைக்கப்பட்டு, தரமான உணவுகள் வழங்கப்பட்டன. கேலோ இந்தியா போட்டிகளின் தொடக்க விழா இந்தியப் பிரதமர் அவர்களால் சென்னையில் 19.01.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்தொடக்க விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர், ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இப்போட்டிகள் அனைத்தும் சிறப்பாக நடத்தப்பட்டு 31.01.2024 அன்று முடிக்கப்பட்டது.

இப்போட்டிகளை விளக்கும் வகையில் "Future is Here – Khelo India Youth Games 2023 என்ற காலப்பேழை புத்தகம் (Coffee Table Book) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தயாரிக்கப்பட்டது. இந்த காலப்பேழை புத்தகத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## காஷ்மீரில் வரும் செப்டம்பர் 18ஆம் தேதி முதற்கட்ட தேர்தல்:

# ஜம்மு - காஷ்மீர் தேர்தலை கூட்டணி அமைத்து சந்திப்போம்!

### காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி அறிவிப்பு !

புதுடெல்லி, ஆக.23–

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலை கூட்டணி அமைத்து சந்திப்போம் என காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

யூனியன் பிரதேசமான ஜம்மு காஷ்மீருக்கு மூன்று கட்டங்களாக சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. முதற்கட்ட தேர்தல் வரும் செப்டம்பர் 18 ஆம் தேதி தொடங்கும் நிலையில், எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் எம்பியுமான ராகுல் காந்தி 2 நாள் பயணமாக ஜம்மு காஷ்மீர் சென்றுள்ளார். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும் காஷ்மீர் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஸ்ரீநகரில் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி வேணுகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது காங்கிரஸ் நிர்வாகிகள் இடையே பேசிய ராகுல் கந்தி, சுதந்திரத்திற்கு பிறகு யூனியன் பிரதேசங் கள்தான் மாநில அந்தஸ்தை பெற்றுள்ளதாகவும், ஆனால் மாநில அந்தஸ்துடன் இருந்த ஜம்மு காஷ்மீர், ஒன்றிய பாஜக ஆட்சியில் யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளதாகவும், தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், கட்சி தலைமையின் சிந்தனையை மனதில் கொண்டு தொண்டர்கள் அயராமல் உழைப்பதாகவும், ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலை கூட்டணி அமைத்து சந்திப்போம் என ராகுல்காந்தி தெரிவித்தார்.

